செ.வெ. எண்: 51 நாள்: 19.01.2012

## செய்தி வெளியீடு

சென்னை, எழிலகம் வளாகத்தில் அமைந்துள்ள சமூகநல இயக்குநரகம், தொழில் மற்றும் வணிகத்துறை இயக்குநரக கட்டடங்களில் கடந்த 15.1.2012 அன்று நள்ளிரவு 12.30 மணியளவில் ஏற்பட்ட தீவிபத்தில் தீயினை அணைக்கும் பணியில் ஈடுபட்டிருந்தபோது பலத்த தீக்காயமடைந்து சென்னை, அப்பல்லோ மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வரும் மத்திய கோட்ட தீயணைப்பு அதிகாரி திருமதி. பிரியா ரவிச்சந்திரன் மற்றும் அசோக் நகர் தீயணைப்பு நிலைய அதிகாரி திரு. முருகன் ஆகியோரை இன்று (19.1.2012) மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் நேரில் சந்தித்து ஆறுதல் கூறினார்கள்.

அப்போது, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், பலத்த காயமடைந்து மருத்துவமனையில் சிகிச்சைப் பெற்று வரும் இவர்கள் விரைவில் பூரண குணமடைய இறைவனை வேண்டுவதோடு, மீண்டும் இயல்பு நிலைக்கு திரும்புவதற்குரிய அனைத்து மருத்துவச் செலவுகளையும் அரசே ஏற்கும் என்றும் அவர்களிடம் தெரிவித்தார்கள். மேலும், சிகிச்சை அளிக்கும் மருத்துவர்களிடம் அவர்களின் உடல்நிலை குறித்து கேட்டறிந்ததோடு, அவர்கள் இயல்பு நிலைக்குத் திரும்பிட தேவையான அனைத்து சிகிச்சைகளையும் அளிக்குமாறு தெரிவித்தார்கள். அப்போது, அப்பல்லோ மருத்துவமனைகளின் தலைவர் டாக்டர் பிரதாப் சி. ரெட்டி உடனிருந்தார்.

******

வெளியீடு: இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9.

நாள்:19.1.2012